தொகுதி-9 எண் 3
Vol. 9 No. 3

ஆனி-புரட்டாசி 2052
July - September 2021

ISSN : 2321-984X

*Chief Editor*
*Dr. M. Sadik Batcha*

*Advisory Editor*
*Dr. N. Chandra Segaran*

*Editorial Board*
*Dr. MAM. Rameez*
*Dr. Jeyaraman*
*Dr. A. Ekambaram*
*Dr. G. Stephen*
*Dr. S. Chitra*
*Dr. S. Senthamizh Pavai*
*Dr. Aranga. Pari*
*Dr. A. Shunmughom Pillai*
*Dr. P. Jeyakrishnan*
*Dr. S. Easwaran*
*Dr. Kumara Selva*
*Dr. A. Palanisamy*
*Dr. Ganesan Ambedkar*
*Dr. Kumar*
*Dr. S. Kalpana*
*Dr. T. Vishnukumaran*
*Dr M. N. Rajesh*
*Dr. M. Ramakrishnan*
*Dr. Govindaraj*
*Dr. Uma Devi*
*Dr. Senthil Prakash*
*Dr. M. Arunachalam*
*Dr. S. Vignesh Ananth*
*Dr. Pon. Kathiresan*
*Dr. S. Bharathi Prakash*

# நவீனத் தமிழாய்வு

*(பன்னாட்டுப் பன்முகத் தமிழ் காலாண்டு ஆய்விதழ்)*

*Journal of*

# Modern Thamizh Research

*(A Quarterly International Multilateral Thamizh Journal)*

Arts and Humanities (all), Language
Literature and Literary Theory, Tamil
UGC Care Listed (Group-I) Journal

***Published by***

**RAJA PUBLICATIONS**

**No. 10 (Upstair), Ibrahim Nagar, Khajamalai,**
**Tiruchirappalli - 620 023, Tamil Nadu, India.**
**Mobile : 9600535241**
**Website : www.rajapublications.com**

**29** பகுதி-8
Part -8

Scanned with CamScanner

# முகவுரை

உலகின் முதல் மொழியாகிய எம்மொழித் தமிழ் உலகிற்குப் பல மொழிகளைக் கொடுத்தது. எம்முடைய மொழிக்கு எம்மொழியிலிருந்தும் எக்காலத்தும் எதுவும் தேவையிருந்ததில்லை. புதிய பொருட்களை உலகம் பெற்றெடுக்கும் போதெல்லாம் தனக்குத் தேவையான சொற்களைத் தானே உருவாக்கிக் கொள்ளும் வலிமை கொண்டது.

இத்துணைச் சிறப்பு வாய்ந்த மொழியில் உருவானவற்றை ஆய்வாக உலகிற்கு எடுத்துச் சொல்லும் **'நவீனத் தமிழாய்விதழ்'** பணிகளில் மகிழ்வுடன் தொடர்ந்து பங்கேற்கும் ஆய்வாளர்களுக்கு ஆசிரியர்குழு நன்றி கூறுகிறது. தொடர்ந்து பங்கேற்கத் தங்கள் முன் வேண்டுகோள் வைக்கிறது.

நன்றியுடன்

ஆசிரியர் குழு

Scanned with CamScanner

| | | |
|---|---|---|
| 351. இரா. நிவேதா & கு.ர. சரளாதேவி | சீருடையான் படைப்புகளில் சாலையோர வியாபாரிகளுக்கு ஏற்படும் பிரச்சனைகள் | 2477-2483 |
| 352. வை.வைத்தியகுமார் & இரா. சிவகுமாரன் | பாவண்ணன் படைத்த ரணம் சிறுகதையின் இலக்கணமும் தொன்மமும் கதைக் கூறுகளும் | 2484-2489 |
| 353. ஜெ. ச. சுதா & கு. கருமுருகானந்தராஜன் | இந்து தமிழ் திசை நாளிதழில் மக்களை நல்வழிப்படுத்தும் பன்முக செய்திகளின் உள்ளடக்கங்கள் | 2490-2494 |
| 354. தமிழரசி. து & நா. அமீதாராணி | நாலடியார் - சமுதாய அறம் | 2495-2500 |
| 355. ச.ஞானசௌந்தரி & மு.அருணகிரி | தொல்காப்பிய வேற்றுமையியல் உரை ஒப்பீடு | 2501-2508 |
| 356. சுந்தர்ஜி. வ & கா.வ. பரந்தாமன் | நெடுநல்வாடை மற்றும் பட்டினப்பாலையில் மக்களின் வாழ்வியல் அறம் | 2509-2515 |
| 357. பா. நாகஜோதி | பெண்மொழியும் பெண்மனச்சிக்கல்களும் | 2516-2523 |
| 358. க.சுந்தரி, நா.தனராஜன் & இல.பொம்மி | நற்றிணையில் பெண்பாற் புலவர்களின் பாடல்கள் - ஓர் ஆய்வு | 2524-2532 |
| 359. A. LOGANATHAN | ORIGIN AND GROWTH OF THE SARVODAYA MOVEMENT | 2533-2538 |
| 360. வெ.சங்கீதா | இலக்கண நூல்களில் கருப்பொருள் | 2539-2544 |
| 361. SUDERMATHI KANNAN R. & M. THAMILARASAN | A SOCIOLOGICAL STUDY ON IMPACT OF DEVELOPMENT IN VILLAGE ENVIRONMENT AND LIFE OF PEOPLE | 2545-2554 |
| 362. RAJIYA SULTAN | THE ROLE OF HIGHER EDUCATION IN THE SOCIETY 2555-2563 | |
| 363. SWATI GUPTA | READING SKILL: WHERE DO WE STAND & WHAT IS TO BE DONE? | 2564-2574 |
| 364. இ. ராம்பிரகாஷ் & மு. இராஜசேகரன் | நற்றிணை நெய்தல்நில மக்களின் வாழ்வியல் | 2575-2579 |
| 365. P. SENKATHIR SELVI | ABOLITION OF INTERMEDIARIES AND INTRODUCTION OF LAND REFORMS IN INDEPENDENT MADRAS: A HISTORICAL PERSPECTIVE | 2580-2586 |
| 366. R. BRINDA KUMARI & V. RAJESWARI | TEMPLES IN AND AROUND NANNILAM TALUK – A STUDY | 2587-2592 |
| 367. வெ. பிரவீணா | சுப்ரபாரதிமணியன் சிறுகதைகளில் வாழ்வியல் கூறுகள் | 2593-2598 |
| 368. K. PRASANNAKUMARAN | EFFECT OF PERFORMANCE OUTCOME ON TEAM COHESION AMONG BASKETBALL PLAYERS | 2599-2606 |
| 369. அ.தௌ.'.பீக் ரமீஸ் | பன்முக நோக்கில் பௌலோ கொய்லோவின் "ரஸவாதி" | 2607-2623 |
| 370. V. MOHANA SURENTH & S. VIJAYA KUMARI | SIX WEEKS OF KINETIC BAND TRAINING ON FLEXIBILITY AMONG VOLLEYBALL PLAYERS | 2632-2631 |
| 371. சி. உமா சாரதா | வள்ளலார் கூறும் அவா அறுத்தல் | 2624-2636 |
| 372. SEEMA BANRA, M. RAMAKRISHNAN & SUDHANSHU SHEKHAR | CONTEMPORARY REFLECTIONS ON PROVERBIAL WISDOMS (WITH EXAMPLES FROM THE HOS OF JHARKHAND) | 2637-2658 |
| 373. NIRAJ KUMAR | REFLECTIONS ON THE ROLE OF MUSIC IN FOLK THEATRE | 2659-2668 |
| 374. M. RAMAKRISHNAN | THE PSYCHOSOCIAL EXPERIENCE OF VULNERABILITY AND ITS METAPHORICAL EXPRESSION IN CHO. DHARMAN'S KOOGAI | 2669-2695 |
| 375. V. JEEVANANTHAM & I. MUTHUCHAMY | PROSPECTIVE TEACHERS' PERCEPTION ON SCHOOL EXPERIENCE PROGRAMME AND THEIR LEARNING OUTCOMES | 2696-2703 |
| 376. ANITA & ARUNA ANCHAL | PARENTING DURING PENDEMIC COVID 19: A REVIEW | 2704-2709 |
| 377. JUTIKA SAIKIA | A STUDY ON INTERNET USAGE AMONG HIGHER SECONDARY STUDENTS IN THE SECONDARY SCHOOL OF THE DIBRUGARH DISTRICT OF ASSAM WITH SPECIAL REFERENCE TO TENGAKHAT EDUCATIONAL BLOCK | 2710-2715 |
| 378. SHRIYA MOKTA | EMERGING ROLE OF INDIA IN GLOBAL GOVERNANCE | 2716-2721 |
| 379. VANDANA DAHIYA | ACCESSIBILITY AND USABILITY OF E-RESOURCES IN JIIT NOIDA | 2722-2738 |
| 380. KAMAL NARAYAN & PRAMOD KUMAR YADAV | THE GROUND-LEVEL CHALLENGES OF POLLING PARTIES IN ELECTIONS | 2739-2748 |
| 381. SHIVA VYAS | A COMPARATIVE STUDY OF FOLK DRAMA FORMS OF RAJASTHAN AND MAHARASHTRA WITH REFERENCE TO RAGA | 2749-2756 |
| 382. CHANDRAKALA DEVI | SAMSKĀRA AS REFLECTED IN MANUSMRTI | 2757-2764 |
| 383. ANINDITA MAZUMDER | PARENTS AND TEACHERS MONITOR CYBERBULLYING | 2765-2770 |
| 384. S. SABINA JOSE & A. EDWARD WILLIAM BENJAMIN | IMPACT OF HEALTHY SCHOOL ENVIRONMENT FOR ACADEMIC ACHIEVEMENT IN BIOLOGY AT HIGHER SECONDARY LEVEL | 2771-2779 |
| 385. R. SELVAGANAPATHY & A. EDWARD WILLIAM BENJAMIN | FLIPPED CLASSROOM METHOD ON ACHIEVEMENT IN CHEMISTRY AT THE HIGHER SECONDARY LEVEL | 2780-2785 |
| 386. K. A. KAVITHA | TAXATION AND MEASUREMENT OF MIDDLE CHOLA PERIOD AS GLEANED FROM VAMANESWARAR TEMPLE INSCRIPTIONS AT CUDDALORE DISTRICT | 2786-2792 |
| 387. க. இராமதுரை & சி. செல்வம் | ஐங்குறுநூறு காட்டும் தலைவன் மாண்புகள் | 2793-2779 |
| 388. KISHOR KUMAR & RAJ KUMAR | MATHEMATICAL EPISTEMOLOGICAL BELIEFS OF PROSPECTIVE TEACHERS OF HARYANA AND BIHAR: A COMPARATIVE STUDY | 2800-2808 |
| 389. Dr. R. PALKANNAN & K. RAMU | EVOLUTION OF EDUCATION BY VARIOUS SCHEMES IN VILLUPURAM DISTRICT, TAMIL NADU | 2809-2815 |
| 390. PRASHANT DWIVEDI & VIJAY SINGH PARIHAR | ROLE OF SELF HELP GROUPS DURING COVID 19 PANDEMIC WITH SPECIAL REFERENCE TO INDIA | 2816-2823 |
| 391. அ. அறிவுக்கொடி | சீவக சிந்தாமணி காட்டும் நாடும், பகுப்பும் | 2824-2829 |
| 392. இரா. உஷாராணி | சங்க இலக்கியத்தில் நீர்த்துறை வழிபாடு | 2830-2836 |
| 393. லோ. சண்முகப்பிரியா & பெ. சுந்தரமூர்த்தி | அறநெறியும் அகத்தவமும் | 2837-2842 |
| 394. சி. சசிக்குமாரி & ப. சுதந்திரம் | தமிழ்ப் புதினங்கள் காட்டும் தலித்தியச் சிக்கல்கள் | 2843-2846 |
| 395. ZIA UL HAQ, MUSHTAQ AHMAD LONE MOHSINA DAWOOD MUZAMIL AHMAD BABA & NISAR AHMAD KAKROO | BATTLE OF WITS: WILL TELEGRAM'S AGGRESSIVE CAMPAIGN AGAINST WHATSAPP PAY-OFF: A CASE STUDY | 2847-2852 |
| 396. ச. விஜயலட்சுமி & இரா. பாலகிருஷ்ணன் | காப்பியங்களில் தலைமைப்பெண் பாத்திரங்கள் | 2853-2861 |
| 397. S. MALATHY V. PONNUSWAMY ULAGANATHAN MABALIRAJAN | KUNDALINI YOGIC PRACTICE IMPROVES A CARING HORMONE CALLED OXYTOCIN - A PILOT STUDY IN KUNDALINI YOGA | 2862-2868 |
| 398. பு. செல்லம்மாள் | கொங்கின் தனித்துவமான சடங்கு : எழுதிங்கள் சீர் | 2869-2875 |
| 399. SALU KUMAR. T, S. JEYANTHI & J.C. JOHN BRITTO | IMPORTANCE OF TOURISM PRODUCTS | 2876-2880 |
| 400. அ. பிரபா & ந. ஐயப்பன் | சங்க இலக்கியத்தில் உழவு முறைகள் | 2881-2884 |


Published by : **Raja Publications,** No. 10, Upstair, Ibrahim Nagar, Khajamalai, Tiruchirappalli - 620 023, Tamil Nadu, India. Mobile : 9600535241
Printed : **The Printing House,** Tiruchirappalli - 620 023, Tamil Nadu, India. Ph : +91 - 431-2420121

Scanned with CamScanner

# இந்து தமிழ் திசை நாளிதழில் மக்களை நல்வழிப்படுத்தும் பன்முக செய்திகளின் உள்ளடக்கங்கள்


**ஜெ. ச. சுதா**

முனைவர் பட்ட ஆய்வாளர் முழு நேரம், தமிழாய்வுத் துறை,
விவேகானந்தா கலை அறிவியல் மகளிர் கல்லூரி (தன்னாட்சி)
(சேலம் பெரியார் பல்கலைக்கழகத்துடன் இணைவுப் பெற்றது), எளையம்பாளையம் – 637205,
திருச்செங்கோடு வட்டம், நாமக்கல் மாவட்டம்.

**முனைவர் கு. கருமுருகானந்தராஜன்**

உதவிப் பேராசிரியர் மற்றும் ஆய்வு நெறியாளர், தமிழாய்வுத் துறை
விவேகானந்தா கலை அறிவியல் மகளிர் கல்லூரி (தன்னாட்சி)
(சேலம் பெரியார் பல்கலைக்கழகத்துடன் இணைவுப் பெற்றது), எளையம்பாளையம் – 637205,
திருச்செங்கோடு வட்டம், நாமக்கல் மாவட்டம்.



## ஆய்வுச் சுருக்கம்

இந்து தமிழ் திசை என்னும் நாளிதழ் தமிழால் இணைவோம் என்னும் இலட்சினை உடன் வீறு நடை போட்டு வருகிறது. இந்த இதழ் 12 பக்கங்கள் கொண்டு ஏழு ரூபாய் சேவையுடன் இதழியல் அறத்தை வளர்த்து வருகின்றது.


## தி இந்து தமிழ் இதழின் முதல் இதழ்

இந்து தமிழ் திசை (பேச்சுவழக்கில் தி இந்து தமிழ் என்று அழைக்கப்படுகிறது) சென்னையை தலைமையிடமாகக் கொண்ட தமிழ் நாளிதழ் . இது தி இந்து குழுமத்தால் வெளியிடப்பட்டது. முதல் இதழ் 16 செப்டம்பர் 2013 அன்று வெளியிடப்பட்டது.

## த இந்து தமிழ் இதழின் தலைமை இடமும் மையங்களும்

சென்னை உட்பட ஏழு மையங்களில் அச்சிடப்படுகிறது. அச்சிடும் மையங்கள் சென்னை, கோவை, மதுரை, திருச்சிராப்பள்ளி, திருவனந்தபுரம், பெங்களூரு மற்றும் திருப்பதியில் உள்ளன.

## செய்திகளின் உள்ளடக்கம்

வணிகம், கல்வி, அறிவு, விளையாட்டு, வினாடி வினா மற்றும் பொழுதுபோக்கு தொடர்பான செய்திகளை தமிழ் செய்தித்தாள் உள்ளடக்கியது. தினசரி நாளிதழ் விரிவான பிராந்திய, தேசிய மற்றும் சர்வதேச செய்திகளைக் கொண்டுள்ளது.

## இந்து தமிழ் திசையின் உரிமையாளர்கள் குழு

தினசரி செய்தித்தாள் வகையைச் சார்ந்தது. விரிதாள் வடிவம் கொண்டது. 16 செப்டம்பர் 2013-ஆம் ஆண்டு அதாவது ஏழு ஆண்டுகளுக்கு முன்பு உரிமையாளர் (கள்) இந்து குழுமத்தால் நிறுவப்பட்டது. இத்தகைய சிறப்பு வாய்ந்த இந்து தமிழ் திசை நாளிதழில் வெளியிடுகின்ற செய்திகளின் பன்முகத் தன்மையை வைத்து மக்களுக்கு ஆற்றுகின்ற இதழியல் கோட்பாடுகளை வகுத்துக் கொள்ள முடிகிறது. மக்களுக்கு விழிப்புணர்வை ஊட்டி வெளிப்படுத்துகின்ற மகத்தான இதழியல் சேவையில் இந்து தமிழ் திசை நாளிதழ் சிறப்பிடம் பெறுகின்றது. திருச்சி, தஞ்சாவூர் பதிப்பில் வெளியிடப்பட்டுள்ள 2021 செப்டம்பர் மாத இந்து தமிழ் திசை நாளிதழ்களில் பதிவு செய்யப்பட்டுள்ள பன்முக செய்திகளின் விளக்கங்களை வைத்து இதழியல் உள்ளடக்கத்தின் சிறப்பை விளக்கும் விதமாக இக்கட்டுரை அமைகின்றது.



Scanned with CamScanner

## முன்னுரை

இந்து தமிழ் திசை நாளிதழில் முதல் பக்கத்தில் தலையங்க முகப்பு செய்தியுடன் வாசகர்களை ஈர்க்கின்ற வகையில் விளம்பர உத்தி உடன் அமைகின்றன. இரண்டாம் பக்கத்தில் பூச்செண்டு என்னும் தலைப்பில் பக்கம் மிளிர்கின்றன. பளிச் முத்து என்னும் தொகுப்பு அறிவை விரிவு செய்கின்றன. நல்லதே நடக்கும் கிழமையின் அடிப்படை விவரங்கள் நாளின் சிறப்பை உணர்த்துவன. ராசிகளின் செயல்பாடுகள் பற்றி சிறு விளக்கம் தருகின்றன. மூன்றாம் பக்கத்தில் ஊர்வலம் என்னும் தலைப்பில் செய்திகளின் தொகுப்பு நிரல்பட வைக்கப்பட்டிருக்கின்றன. சின்னச் சின்னதாய் என்னும் பகுதியில் மாவட்டங்கள் தோறும் நடைபெற்ற விவரங்கள் பேசப்படுகின்றன. நகரில் நடப்பவை என்னும் பகுதியில் திருச்சி, பெரம்பலூர், கரூர் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் நடைபெற உள்ள செய்திகள் தரப்படுகின்றன. நான்காம் பக்கத்தில் மாநிலம் என்னும் தலைப்பில் மாநில அளவிலான செய்திகள் வரிசைப்பட வகைப்படுத்தப்பட்டுள்ளது. ஐந்தாம் பக்கத்தில் ஊர்வலம் என்னும் தலைப்பில் ஊர்களில் நடக்கின்ற செய்திகளை நன்கு அறிய முடிகிறது. எட்டாம் பக்கத்தில் கருத்துப்பேழை கண்ணையும் கருத்தையும் கவர்கின்றன. ஒன்பதாம் பக்கத்தில் மாநிலம் சார்ந்த சிந்தனைகள் வலம் வருகின்றன. பத்தாம் பக்கத்தில் தேசத்தின் செய்திகள் தெளிவுபட பல்வேறு சிந்தனைகளை வழங்குகின்றன. பதினோராம் பக்கத்தில் இணைப்பு இதழ் பக்கமாக அமைகின்றன. 12 ஆம் பக்கத்தில் கடைசி பக்கம் என்னும் தலைப்பில் செய்திகள் நிறைவு பெறுகின்றன இப்படி அமைத்துக்கொண்ட பக்கங்களை மிக சிறப்பான செய்திகளின் தொகுப்பாக அமைத்துக் கொண்டு இந்து தமிழ் திசை நாளிதழ் மக்களை நல்வழிப்படுத்தி வருகின்றன என்பதை ஆராய்ச்சி நோக்கில் செய்திகளின் உள்ளடக்கத்தை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## 1. புதுமையான செய்திகள்

இந்து தமிழ் திசை நாளிதழ் புதுமையான செய்திகளுக்கு முக்கியம் தரப்படுகின்றன. இதுவரை இல்லாத இப்பொழுது புதுமையாக நடக்கின்ற செய்திகளை மக்களுக்குக் கொண்டு செல்வதில் முக்கியப் பங்காற்றுகின்றது. சான்றாக இந்து தமிழ் திசை ஃபிட்னஸ் அண்ட் சாடீஷ் இணைந்து நடத்தும் குழந்தைகளுக்கான ஜிம்பா பூட் கேம்ப் வகுப்புகள் ஆன்லைனில் அக்டோபர் 4-ஆம் தேதி தொடங்குகிறது எனும் செய்தி பதிவிடப்பட்டுள்ளது இது புதுமையான சிந்தனையைத் தருவதாக அமைந்துள்ளது.

## 2. மனித தாக்கத்தை விளைவிக்கும் செய்திகள்

நாளிதழ் படிக்கின்ற மக்களுக்கு குறிப்பாக வாசகர்களுக்கு அதிக எதிர்பார்ப்பைத் தருவதாக செய்திகளை அமைக்க வேண்டும் இத்தகைய பணியை இந்து தமிழ் திசை நாளிதழ் சிறப்பாக செய்து வருகின்றன. சான்றாக உள்ளாட்சி அமைப்புகளில் செப்டம்பர் 26-ஆம் தேதி முதல் தீவிர பிரச்சாரம் கருவறையை தடுக்க கட்டுப்பாடுகள் விதிக்கப்படுமா எனும் செய்தி பதிவு செய்யப்பட்டுள்ளன.

## 3. உள்ளூர் நடவடிக்கை செய்திகள்

பரவலாக மக்கள் பல்வேறு ஊர்களுக்குச் சென்று இருந்த போதிலும் உள்ளூர் செய்திகளை அறிந்து கொள்வதற்கு விருப்பமொடு இருப்பார்கள் அத்தையை செய்திகளை மக்களுக்கு கொண்டு செலுத்த வேண்டும் என்னும் அடிப்படையில் உள்ளூர் நடவடிக்கைச் செய்திகளுக்குத் தனிக் கவனம் செலுத்துகின்ற நாளிதழாக இந்து தமிழ் நாளிதழ் விளங்குகின்றது. சின்னச் சின்னதாய் என்னும் தலைப்பில் வெளியிடப்பட்டுள்ள ஊர்வலம் என்னும் பக்கத்தில் ஊர் செய்திகளை நன்கு அறிந்து கொள்வதற்கு இந்து தமிழ் திசை நாளிதழ் பயன்படுகின்றன. சான்றாக மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தில் 30 ஆயிரம் பேர் பயன் பெறுவர் என்று ஆட்சியர் தகவல் என்னும் செய்தியும் எதிர்க்கட்சிகளின் ஒருங்கிணைப்பு



Scanned with CamScanner

மக்களைத் தேர்தலில் மாற்றம் ஏற்படுத்தும் என்னும் செய்தியும் ஊரில் நடைபெறுகின்ற செய்திகளாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன.

4. பொருளாதாரச் செய்திகள்

பணம் தொடர்புடைய செய்திகளை குறிப்பாக அரசின் வரவு செலவுத் திட்டங்கள் புதிய வரிகள், விலைகள் பற்றிய செய்திகளை சிறப்பாகத் தருகின்ற நாளிதழாக இந்து தமிழ் திசை நாளிதழ் திகழ்கின்றது. சான்றாக கூட்டுறவு வங்கிகளில் அஞ்சுபவனுக்கு மேற்பட்ட நகைக் கடன்களை விரைவாக வசூலிக்கப் பதிவாளர் உத்தரவு என்னும் செய்தி பொருளாதார வளர்ச்சிக்கான நடவடிக்கையாக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் ஒரு சான்றாக செப்டம்பர் 23-ஆம் தேதி செய்தித்தாளில் தமிழகத்தில் ஏற்றுமதியை மேம்படுத்த தனிக்குழு ரூபாய் 2 ஆயிரத்து 120 கோடியில் புதிய முதலீடுகள் முதல்வர் ஸ்டாலின் முன்னிலையில் ஒப்பந்தங்கள் கைபெழுத்து என்னும் முகப்பு செய்தி பொருளாதாரத்தின் முன்னேற்றத்திற்கான வலிமையைக் காட்டி விடுகின்றது. ஏற்றுமதி மதிப்பு கூட்டு உற்பத்தியை வளர்ப்பதற்கான சூழலை ஏற்படுத்தி மக்களுக்கு நல்வழி படுத்துகின்ற பணியில் தன்னிறைவு பெற்ற இதழாக இந்து தமிழ் திசை விளங்குகின்றது.

5. சமயம் தொடர்பான செய்திகள்

கடவுளை மையம் கொண்டு சைவம், வைணவம், பௌத்தம், சமணம் முதலிய பல்வேறு சமயங்கள் தோன்றி வளர்ந்து வந்துள்ளன. மனிதம் போற்றுகின்ற மதத்தின் அடிப்படையிலான கொள்கைகளைப் பின்பற்றி வாழ்வோருக்கு மன ஊக்கம் தருகின்ற வகையில் சமயச் செய்திகளை இந்து தமிழ் திசை நாளிதழ் வழங்கி வருகின்றன. சான்றாக ஆனந்த ஜோதி எனும் இணைப்பு இதழ் பதிவு வழியாக சமயச் சிந்தனைகளை வளர்க்கும் இதழாக இந்து தமிழ் திசை நாளிதழ் விளங்குவதை அறிய முடிகிறது. குறிப்பாக நான் என்ன செய்வேனடி எனும் கட்டுரை வைணவ சிந்தனையைத் தருகின்றது. தீய தூண்டுதல்களை வெல்வது எப்படி என்னும் கட்டுரை கிறிஸ்துவ தத்துவத்தைத் தருகின்றது.

6. இன்ப துன்ப நிகழ்ச்சிகளின் செய்திகள்

மனிதர்கள் மேற்கொள்கின்ற வாழ்வியலின் வெளிப்பாடாக பல்வேறு நிகழ்வுகள் செய்திகளாக வெளிவருகின்றன. சான்றாக மத்திய செம்மொழி நிறுவனத்தின் துணைத்தலைவராக சுந்தரமூர்த்தி இன்று பொறுப்பேற்பு என்னும் செய்தி இன்பத்தைத் தருகின்றது அமைகின்றது. மகாத்மா காந்தி கற்றுத்தந்த தொண்டுள்ளம், சகிப்புத்தன்மை நமது பாதை ஆகட்டும் என்று முதல்வர் ஸ்டாலின் அறிக்கை தந்திருப்பது இன்பத்தை தருகின்றது. இப்படி ஆக்கப்பூர்வமான நிகழ்வுகள் எல்லாம் இன்பம் நிறைந்த செய்திகளாகத் தோற்றம் பெறுகின்றன.

அழிவுபூர்வமான நிகழ்வுகள் துயரத்தையும் துன்பத்தையும் தந்துவிடுகின்றன அவையும் செய்திகளாக மக்களுக்கு வழங்கப்படுகின்றன. சான்றாக பெண்ணை கல்லால் தாக்கிக் கொலை செய்த ஆண் நண்பர் கைது என்பது துன்பத்தைத் தருகின்ற செய்தியாக அமைகின்றது. மேலும் ஒரு சான்றாக பெண் குழந்தையை 2 லட்சத்திற்கு விற்ற பெற்றோர் உட்பட 7 பேர் கைது என்பது துன்பத்தைத் தருகின்ற செய்தியாக அமைகின்றது. இப்படி இன்ப துன்பங்களைத் தருகின்ற செய்திகளின் தொகுப்பாக இந்து தமிழ் திசை நாளிதழ் விளங்குகின்றது.

7. மர்மமும் மோதலும் நிறைந்த செய்திகள்

ஒரு இடத்தில் நடந்த நிகழ்வு உடனடியாக ஒருவருக்கு புரியாத வண்ணம் மர்மமான நிலையில் நிகழ்ந்ததை மர்ம செய்திகளாக வெளி வருகின்றன. சான்றாக பசுபதி பாண்டியன் கொலையில் தொடர்புடைய 9 ஆண்டுகளுக்குப் பிறகு திண்டுக்கல்லில் கொலை என்னும் செய்தி மர்மம் நிறைந்த செய்தியாக அமைகின்றது. சமூகத்தில் சாதி ரீதியான பிரிவினையை ஏற்படுத்தி மோதலை உண்டாக்கும் செய்தியாக கர்நாடகாவில் கோவிலுக்குள் நுழைந்த 4 வயது தலித் குழந்தைக்கு ரூபாய் 25,000 அபராதம் அர்ச்சகர் உட்பட 5 பேர் கைது செய்து மோதல் போக்கை உருவாக்குகின்ற செய்தியாக அமைகின்றது.



Scanned with CamScanner

### 8. நகைச்சுவை மற்றும் விளம்பரச் செய்திகள்

நாள்தோறும் நாளிதழ் வாசிக்கின்ற வாசகர்களுக்கு அறிவுபூர்வமான செய்திகளுடன் அவ்வப்பொழுது நகைச்சுவையும் தேவைப்படுகின்றன. அதை மனதில் கொண்டு பல்வேறு நிலைகளில் நடைபெற்ற நகைச்சுவைக் கருத்துக்களை செய்திகளாக வெளியிடுவதில் இந்து தமிழ் நாளிதழின் பங்கு அளப்பரியது. குறிப்பாக நாடாளுமன்றத்தில் சட்டமன்றத்தில் கேலிக்கும் கிண்டலுக்கும் ஆளாகும் அகவையில் வெளிப்படும் செய்திகளை நகைச்சுவையாக வெளியிடுகின்றன. சான்றாக கருத்துச் சித்திரம் எனும் செய்தி வாசகர்களைச் சிந்திக்கவும் சிரிக்கவும் வைக்கின்றது.

பல்வேறு விளம்பரங்களின் வழியாக பொருளாதாரத்தை ஈட்டுகின்ற நிலையில் வெளிப்படுத்தினாலும் சமூக விழிப்புணர்வுக்கான செய்தியாகவும் விளம்பர செய்திகள் இந்து தமிழ் நாளிதழில் வெளிவந்து கொண்டிருக்கின்றன. சான்றாக அரசுடமையாக்கப்பட்ட கனரா வங்கியின் ஈழத்திற்கான தேதியும் மண்டல வாரியாக அறிவிக்கின்ற செய்தி நல்ல விளம்பரமாக அமைகின்றது. அளவுக்கு ஏற்ற விளம்பரங்கள் இதழியல் பொருளாதார வளர்ச்சிக்கு உதவுகின்றன.

### 9. அறிவியல் பூர்வமான செய்திகள்

உலகத்தில் நடைபெறும் அதிசயம் நிறைந்த செய்திகளோடு அறிவியல் பூர்வமான சிந்தனைகளை புகுத்தி நவீன அறிவியல் கருத்துக்களை பரப்புகின்ற பணியில் இந்து தமிழ் நாளிதழ் முக்கிய பங்காற்றுகின்றன. நாட்டின் வளர்ச்சிக்கும் மக்களின் வாழ்க்கை விழிப்புணர்வுக்கும் அறிவியல் சார்ந்த விழிப்புணர்வு இதழியல் வழியாக பரப்பப்பட்டு வருகின்றன. சான்றாக வணிக வாகன ஓட்டுனர்கள் உறங்குவதைக் கண்டறியும் தொழில்நுட்பம் அவசியம் அதிகாரிகளுக்கு மத்திய அமைச்சர் அறிவுறுத்தல் என்னும் செய்தி அறிவியல் கண்டுபிடிப்பின் மேம்பாட்டையும் மக்களுக்கான விழிப்புணர்வையும் வெளிப்படுத்துகின்றது.

### 10. இயற்கை சீற்றங்கள் பற்றிய செய்திகள்

இயற்கையாக நடக்கின்ற புயல், வெள்ளம், இடி, மின்னல் வழியாக வெளிப்படுகின்ற செய்திகள் மக்களுக்கு நல்ல விழிப்புணர்வை ஊட்டி விடுகின்றன. அத்தகைய சமுதாய விழிப்புணர்வில் இந்து தமிழ் நாளிதழில் முயற்சிகள் மக்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றிருக்கின்றன. குறிப்பாக தட்பவெப்ப நிலை பற்றி மழை பெய்தல் வெயில் அடித்தல் போன்ற செய்திகளை உடனுக்குடன் தருவதிலும் இந்து தமிழ் நாளிதழ் சிறப்பாக பணியாற்றி வருவதை அறிய முடிகிறது. 9 மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்பு என்னும் செய்தி மக்களுக்கு நல்ல விழிப்புணர்வைத் தருகின்றது. கடலூர், விழுப்புரம், திருவண்ணாமலை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை ஆகிய மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி மின்னலுடன் கன மழை பெய்யும். கடலோர மாவட்டங்களில் மிதமான மழையும் பெய்யும். சென்னையில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். இது போன்ற சிந்தனைகள் இயற்கை சீற்றங்களில் இருந்து மக்களைக் காத்துக்கொள்ள உதவும் வகையில் இந்து தமிழ் திசை நாளிதழ் நன்கு பணியாற்றுகின்றன.

### முடிவுரை

இந்து தமிழ் திசை நாளிதழ் வெளிவருகின்ற செய்திகளின் உள்ளடக்கம் என்பது மக்களை நல்வழிப்படுத்தி வளமுடனும் நலமுடனும் வாழ வைக்கின்றன. அறிவார்ந்த விழிப்புணர்வுக்கு சிறந்த தகவல் தொடர்பு ஊடகமாக இந்து தமிழ் திசை நாளிதழ் விளங்குகின்றன. மக்கள் தகவல் தொடர்பு சாதனங்களும் பத்திரிகைகளுக்கும் இடையே உள்ள ஒற்றுமை வேற்றுமைகளை விளக்கும் விதமாக இந்து தமிழ் திசை யில் பணிகள் அமைகின்றன. செப்டம்பர் 2011-ஆம் ஆண்டு இந்து தமிழ் திசை நாளிதழ் சொல்லும் செய்திகளின் தொகுப்பு இதழியல் விதிகளைப் பின்பற்றி பொறுப்புணர்வு பத்திரிகையாகத் திகழ்வதை அறிய முடிகிறது. இதழின் வளர்ச்சிக்குச் சிறந்த

அச்சுக்கலை இதழாக இந்து தமிழ் திசை நாளிதழ் திகழ்கின்றது. கிபி 1780-ஆம் ஆண்டு ஜனவரி 29ஆம் நாள் முதல் இந்திய செய்தித் தாளை ஜேம்ஸ் அகஸ்டஸ் ஹிக்கி என்பவர் கல்கத்தாவிலிருந்து வெளியிட்ட அதேபோல கடந்த 7 ஆண்டுகளில் உலகம் முழுவதும் பெயர் பெற்ற நாளிதழாக இந்து தமிழ் திசை நாளிதழ் வளர்ந்திருக்கின்றன. மக்கள் தொடர்பு கலையை நன்கு அறிந்து செயல்படும் இதழாக இந்து தமிழ் திசை நாளிதழ் திகழ்கின்றன. பொதுவான செய்திகள், சிறப்புச் செய்திகள், வீட்டுச் செய்திகள், நாட்டுச் செய்திகள், தமிழ்நாட்டுச் செய்திகள் என்று பன்முகத் தன்மையில் செய்திகளின் விரிவாக்கம் மக்களை நல்வழிப்படுத்தும் உள்ளடக்கமாக அமைந்து உள்ளன.

## தொகுப்புரை

இந்து தமிழ் திசை நாளிதழ் சிறந்த செய்திகளின் தொகுப்பு நிறுவனமாக விளங்குகிறது. என்ன செய்தி யார் அறிவிப்பது எங்கு அறிவிக்கப்படுகிறது எப்போது ஏன் அறிவிக்கப்படுகிறது என்னும் பல்வேறு சிந்தனைகளை முன்வைத்து செய்தி வெளியிடும் இதழாக இந்து தமிழ் திசை நாளிதழ் விளங்குகின்றது. உடலுக்கும் உள்ளத்திற்கும் வலிமை சேர்க்கின்ற மருத்துவ செய்திகள் சமூக விழிப்புணர்வை எடுத்துரைக்கின்றன. வணிக நிறுவனங்களின் பொருளாதார மேம்பாட்டு சிந்தனை செய்திகள் நாட்டின் வளர்ச்சிக்கு பெரிதும் உதவுகின்றன. 2021-ஆம் ஆண்டின் பெண்களுக்கு எதிரான குற்றம் 46 சதவீதம் அதிகரிக்கிறது தேசிய மகளிர் ஆணையத் தலைவர் தகவல் என்னும் செய்தி பெண்களுக்கான எதிர்கால நலனை கருத்தில் கொண்ட செய்தியாக வெளிப்பட்டு நிற்கின்றது. 320 ஒரு மாணவர்களுக்கு ஸ்மார்ட் போன் வழங்கிய ஆசிரியைக்கு விருது டெல்லி அரசு கவுரவம் என்னும் செய்தி ஆசிரியர் மாணவர்களுக்கான நல்ல சுமுகமான உறவை மேலும் வலிமை அடைய செய்கிறது. கரோனா வைரஸ் பாதிப்பிலிருந்து மேலும் ரியல் எஸ்டேட் துறை சொந்த வீடு வாங்குவதில் மக்கள் ஆர்வம் ஜே எல் எல் அண்ட் ப்ளூார் நிறுவன ஆய்வில் தகவல் என்னும் செய்தி மக்களின் மனதை கண்டறிந்து வெளிப்படுகின்ற ஆய்வு சிந்தனை பதிவாக அறிய முடிகிறது. ஒரு லட்சம் விவசாயிகளுக்கு புதிய மின் இணைப்பு ஆணை வழங்கும் துவக்க விழா என்று அரசு விளம்பரம் செய்து இருப்பது நடைமுறையில் கொண்டு வருகின்ற வேளாண்மை வளர்ச்சி சாதனைகளாக பார்க்க முடிகிறது. மக்களிடமிருந்து குறிப்பாக வாசகர்களிடமிருந்து விமர்சனங்களையும் கட்டுரைகளையும் கருத்துக்களையும் பெறுவதில் தனி கவனம் செலுத்துகின்ற இதழாக இந்து தமிழ் திசை நாளிதழ் விளங்குகின்றது. மக்கள் தகவல் தொடர்பில் தன்னிறைவு பெற்ற இதழாக இந்து தமிழ் திசை நாளிதழ் அமைகின்றது. நியூஸ் என்னும் ஆங்கிலச் சொல்லில் வடக்கு கிழக்கு மேற்கு தெற்கு என்னும் நான்கு திசைகளில் இருந்து வருகின்ற செய்திகளின் தொகுப்பாக இந்து தமிழ் திசை நாளிதழ் திகழ்கின்றன. பல்வேறு வகையான முரண்பாடுகளும் அரண்பாடுகளும் நிறைந்த இதழியல் உலகில் சமத்துவத்தையும் சம தர்மத்தையும் சமூக நீதியும் காத்து நிற்கின்ற இதழாக இந்து தமிழ் திசை நாளிதழ் திகழ்கின்றது

## ஆய்விற்கு பயன்பட்ட நூல்கள்

1. ஈஸ்வரன். ச. 2015. தகவல் தொடர்பியல், சென்னை, பாவை பப்ளிகேஷன்ஸ்.
2. குருசாமி. மா. பா. 1988. இதழியல் கலை, திண்டுக்கல், குரு தேமொழி தாயகம் பதிப்பு
3. சவரிமுத்து. சா. 2002. இதழியல் மக்கள் தகவலியல், சென்னை, மணிமொழி பதிப்பகம்
4. நடராஜன். கே. 1991. மக்கள் தொடர்பு கலை, சென்னை, ஸ்ரீ இந்து பப்ளிகேஷன்ஸ்.
5. ரெஜித் குமார். த. 2017. ஊடகவியல், சென்னை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.
6. செப்டம்பர்- 2021, மாத இந்து தமிழ் திசை நாளிதழ்கள்.

cs



Scanned with CamScanner